அறியாமையில் இருக்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி

# சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்!

## பெரியார் நினைவு சமத்துவபுரத்தை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சேலம், ஜூன் 12-

“அறியாமையில் இருக்கும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ‘ட்விட்டர்’ பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**’சேலத்திலிருந்து மேட்டூர் புறப்பட்டேன். வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தைப் பார்வையிட்டேன்.**


**1998ஆம் ஆண்டு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தச் சமத்துவபுரத்தில் உள்ள வீடுகள் - சாலைகள் உள்ளிட்டவற்றில் பழுது நீக்கிச் சீரமைக்கும் பணிக்குக் கடந்த 2021-2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்திருந்தோம். தற்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து, சாலை மற்றும் குடிநீர் வசதிகள் பற்றிக் கேட்டறிந்தேன். அப்போது அங்கிருந்த மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக இருப்பதாகவும், சமத்துவபுரத்தைச் சீரமைத்ததற்கு நன்றியும் தெரிவித்தனர்.**

**அவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி நாடெங்கும் பரவி, நாடே சமத்துவபுரமாகிட வேண்டும் என்ற தமிழினத் தலைவர் கலைஞரின் கனவு என் எண்ணங்களில் ஓடியது.**

**கலைஞர் 100-இல் அவரது இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, இன்னும் அறியாமையில் இருக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! தொடர்ந்து உயர்த்தப்பட்டு வரும் “ மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை என்றால், வீட்டில் ‘பேன்’ சுவிட்சைப் போடாதீர்கள்...வீட்டுக்கு வெளியே போய் மரத்தடியில் அமர்ந்து கொள்ளுங்கள்!” என்று, அஸ்ஸாம் சட்ட மன்றத் தலைவர் பிஸ்வாஜித் தைமாரி, அந்த மாநில பொதுமக்களைக் கேலி செய்திருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, அவர் பா.ஜ..கவைச் சேர்ந்தவர் அல்லவா ! அவர் அப்படிச் சொல்லியிருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை !**

**ஆனால் அவர் தனது அதிகாரப் பூர்வமான வீட்டில், மொத்தம் 22 ஏ.சி.க்களைப் பொருத்தி, வெகு சுகமாக வாழ்கிறாராம். அதற்கான கட்டணத்தை அரசாங்கம் அல்லவா செலுத்துகிறது!**

**பிரான்ஸ் நாட்டின் கடைசி மகாராணி மேரி அன்ட்னாய்னெட், பசியால் வாடிய மக்கள் தம் பசி போக்கிக்கொள்ள ரொட்டித்துண்டு கேட்டபோது, போய் ‘கேக்’சாப்பிடும் படி கேலி பேசினாராம்.**

**அந்த சர்வாதிகார ராணிக்கும், அஸ்ஸாம் பா.ஜ.க. சபாநாயகருக்கும், அதிகார மமதையில் எந்த வேறுபாடும் இல்லை.**

**ஆனால் ஒன்று; இது மாதிரி நபர்கள், பா.ஜ.க. பயணத்தின் திசையைப் பறைசாற்றுகிறார்கள் !**

ஆளுநர் ரவி ‘தனி அரசியல், நடத்துவதை எதிர்த்து

# தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன்.12-

பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா மரபின்படி, ஆளுநருக்குப் பட்டம் - பதக்கம் வழங்குவதுதான் வேலையே தவிர, தனியே பேருரையாற்றுவது அவரது வேலையல்ல; ஆளுநர் பொறுப்பை உணராது தமிழ்நாடு சட்டமன்றம் மாற்றி இயற்றி அனுப்பிய மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி. ஆளுநர் ‘தனி அரசியல் நடத்துவதை’ எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் உடனடியாக சட்டப் பரிகாரம் தேட முன்வர வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தனியே சட்டம் இயற்றும் உரிமை - வாய்ப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை, சட்டமன்ற, நாடாளுமன்றங்களுக்கே உண்டு. ஜனநாயகக் குடியரசில் - சட்டப்படி.

ஆளுநர் ஆட்சியில் வேண்டுமானால் தனியே அவர் ஆளுமை சட்டம் போடலாம் - அதுகூட நிரந்தர உரிமை கிடையாது என்பது அரசமைப்புச் சட்டத்திலும், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளாலும் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் ஒன்றாகும்.

அந்த அடிப்படையில்தான் சில பல்கலைக் கழகங்களுக்கு (அரசு நடத்தும் கல்வி அமைப்புகளுக்கு) அந்தந்த மாநில ஆளுநர்களை வேந்தர்களாக (Chancellor) மாநில அரசுதான் நியமித்திருக்கும் வாய்ப்பை தந்தது. அதுவும் அந்த நபர் ஆளுநராக இருப்பதால் மட்டுமே கிடைக்கும் (ex-officio) வாய்ப்பாகும்! அவ்வாய்ப்பை அவர்களுக்குத் தந்த அமைப்பான அரசுக்கு அதனை மாற்றும் உரிமையை எவரும் மறுக்க முடியாது. கேள்வி கேட்கவும் முடியாது. இந்தியாவில் உள்ள எல்லா மாநில அரசு பல்கலைக் கழகங்களிலும் ஆளுநரே வேந்தர் என்ற பொத்தாம் பொதுச்சட்டம் ஏதும் கிடையாது.

அதிகார போதையில் ஆளுநர் இந்தப் பின்னணியை அறவே மறந்துவிட்டு அல்லது தனது அதிகார போதையில், ஆளுநர் பொறுப்பை உணராது தமிழ்நாடு சட்டமன்றம் மாற்றி இயற்றி அனுப்பிய மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு அரசியல் சித்து விளையாட்டுக் காட்டுகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தானடித்த மூப்பாக துணைவேந்தர்களை நியமனம் செய்வது - அவர்களை அடிக்கடி அழைத்து (உயர்கல்வித் துறைக்கே தெரியாமல்) ஆலோசனை என்ற பெயரில், ஒரு போட்டி அரசு நடத்துவது என்ற வேண்டாத வேலை களிலும், விதண்டாவாதம் செய்யும் - வீண் விவகாரங்களில் ஈடுபட்டு, தி.மு.க. ஆட்சியின் எதிர்க் கட்சித் தலைவர் போல், பணியாளர்களை சட்ட ஆட்சியியல் விரோதமாக நடக்கத் தூண்டுகிறார்!

பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டில் பல உண்டு என்றாலும், ஒவ்வொன்றும் தனித்தனிச் சட்ட விதிகள்படி நடத்தப்பட வேண்டியவை யாகும். துணைவேந்தர்கள் நியமனங்களின் போது, தேடுதல் கமிட்டி (Search Committee) என்ற மூவர் கொண்ட ஒரு குழு அதன் சட்ட விதிகள்படி மூன்று பேர்களைத் தரும், அதில் ஒருவர் நியமிக்கப்படுவார் என்பதுதான் நடைமுறை (அதில்கூட Seniority என்று 1, 2, 3 வரிசை கிடையாது). மூவருக்கும் சம தகுதி, அதில் ஒருவருக்கு இறுதி நியமனம் - இதுதான் நடைமுறை - சட்டப்படி.

அந்தந்த பல்கலைக் கழக விதிப்படிதான் நியமனம் என்பதே சரியானது

இந்த மூன்று பேர் பரிந்துரையின்படி - மற்ற மூன்று தேடல் குழுவில், ஒன்றிய அரசின் மானியக் குழுவின் பிரதிநிதி அமைய வேண்டும். பின்னால் - இப்போது வந்த புதிய சட்ட விதி - அது முந்தைய எல்லா பல்கலைக் கழக தனிச் சட்டங்களுக்கும், விதிகளுக்கும், நடைமுறைகளுக்கும் பொருந்தாது.

அந்தந்த பல்கலைக் கழக விதிப்படி துணைவேந்தர்கள் நியமனம் செய்யப்படுவதுதான் சரி. இங்கே பாரதியார் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் நியமனம் - காலதாமதமாக கொண்டு வந்து ஆளுநர் இந்தப் பழைய சட்ட விரோதமான சட்டத்தையே மாற்றுங்கள் என்று வற்புறுத்தி அதுவரை நியமனத்தைக் கிடப்பில் போட்டு கோவை பல்கலைக் கழக நிர்வாகம் முழு வீச்சில் நடைபெறாமலிருக்க முட்டுக் கட்டை செய்தார்.

இவற்றால் கல்வியாளர்களின் வன்மையான கண்டனத்திற்குக்கூட அவர் ஆளானார்.

**அரசியல்விஷமத்தனம் செய்கிறார் ஆளுநர்!**

பல்கலைக் கழக பட்டமளிப்புப் பேருரைகளை நிகழ்த்த யாரை அழைப்பது என்பது அந்தந்த பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவின் ஏகபோக முறை; அதில் இந்த ஆளுநர் தலையிட்டு, இன் னின்னாரைத்தான் அழைக்கவேண்டுமென்ற அடாவடி நிபந்தனைகள். பட்டமளிப்பு விழா மரபின்படி, ஆளுநருக்கு பட்டம் - பதக்கம் வழங்குவதுதான் வேலையே தவிர, தனியே பேருரையாற்றுவது அவரது வேலையல்ல; தனியாக கூடுதலாக அவரையே பட்டமளிப்பு விழா உரையாற்ற அந்த ஆட்சிமன்றக் குழு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இதனையெல்லாம் புறக்கணித்துவிட்டு, தமிழ்நாடு ஆளுநர் - மாணவர்கள் நலனுக்கு எதிராக, வேலை வாய்ப்புக்குத் தேவைப்படும் பட்டச் சான்றிதழ்களை பெற முடியாதபடி ‘நந்தி’ போல தடுத்துக்கொண்டு அரசியல் விஷமத்தனம் செய்கிறார்!

நாளும் சம்பந்தமில்லா அடாவடியான உளறுதலை தொடர்ந்த வண்ணம் உள்ளார்!

ஆணவத்தின் உச்சத்தில் நுனிக் கொம்பர் ஆகிறார்!

முதலமைச்சர் கூற்றை வரவேற்கிறோம் இதனை தமிழ்நாடு அரசு அளவு கடந்த பொறுமையுடன் கண்காணித்து சகித்து வருகிறது; மக்கள் கடலின் பொங்கும் ஆத்திரமோ நாளும் பெருகிய வண்ணம் உள்ளது. தஞ்சையில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், சட்டப்படி வழக்குப் போடுவது குறித்து யோசித்து வருவதாகக் கூறியுள்ளார்.

**நாம் அதை வரவேற்கிறோம்!**

தாமதிக்காமல் சட்டப் போராட்டக் களத்தில் களமாட உடனே இறங்கியாக வேண்டும்; முந்தைய தீர்ப்புகள் நமக்கு கதவுகளை அகலமாகத் திறந்து விட்டுள்ள நிலையில், வழக்குப் போடுவதை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

நீதி, நேர்மை நமக்குக் கிடைத்திடும், அவசியம்!

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில்

# அரசுப்பள்ளியை சீரமைத்த சிங்கப்பூர் சகோதரர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வாழ்த்து!

சேலம், ஜூன் 12-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில், கஜா புயலினால் சேதமடைந்த 60 ஆண்டுகால அரசுப்பள்ளியை, அந்தக் கிராமத்தில் வசித்த தாய் தனசேகரி அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, சிங்கப்பூர் வாழ் சகோதரர்களான இளங்கோவன், முத்தழகன், இராஜகோபால் ஆகியோர் நம்ம_பள்ளி திட்டத்தின்படி செப்பனிட்ட செய்தியறிந்து முதலமைச்சராக மட்டுமல்ல, திருவாரூர்க்காரனாகவும் உள்ளம் நெகிழ்ந்து போனேன்.**

**பள்ளியைச் செப்பனிட்டதோடு, ‘தனசேகரி அம்மாள் அறிவரங்கம்’ என மறைந்த தங்களது தாயின் பெயரை அரசின் அனுமதியோடு அப்பள்ளிக் கட்டடத்திற்குச் சூட்டிய அந்தச் சகோதரர்கள், அந்த ஊரின் பெயர் போல் பெருகவாழ்வார்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்!

ஹாங்காங்கில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் காணொலியில் பங்கேற்பு!

ஹாங்காங், ஜூன் 12-

முத்தமிழறிஞர் கலைஞரின் அயலக உடன்பிறப்புகள் குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பன்முக ஆளுமையை பற்றி உலகின் பல நாடுகளில் வாழும் பல்துறை அறிஞர்கள் மூலம் அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையில் ஓர் ஆண்டிற்குள் 100 கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது.

10 .6.2023 அன்று நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு 100 கூட்ட துவக்க விழாவினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மூலம் காணொலி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் வாஷிங்டன் சிவா அனைவரையும் வரவேற்று பேசினார். தலைமை ஒருங்கிணைப்பாளர் லண்டன் செந்தில் குமார் நிகழ்வில் தொகுப்புரை வழங்கினார்.

விக்ரம் சதிஷ் தொகுத்த ஹாங்காங் தி.மு.க. நட்பு குழுவின் வெளியீடான முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பொன்மொழிகள் மற்றும் வாழ்க்கை குறிப்புகள் 100 எனும் நூலினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டார்.

அடுத்து நடக்க இருக்கும் கூட்டங்களின் திட்டத்தினை ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில் மற்றும் விக்ரம் விளக்கி கலந்துகொண்ட ஆளுமைகளின் கருத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

நன்றியுரையினை ஹாங்காங் விக்ரம் வழங்கினார்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து கலந்துகொண்ட உடன்பிறப்புகள் நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடினர்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# புழல் 24-வது வட்டத்தில் அறுசுவை உணவு!

## கே.பி.சுந்தரேசன் ஏற்பாட்டில் - ஜி.துக்காராம் வழங்கினார்!

சென்னை, ஜூன் 12

புழல் 24-வது வட்டக் கழகம் சார்பில் வட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன் ஏற்பாட்டில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆணைக்கிணங்க பகுதி கழக செயலாளர் ஜி.துக்காராம் பொதுமக்களுக்கு முட்டை, பிரியாணி வழங்கினார்.

நிகழ்வில் நிர்வாகிகள் பி.கென்னடி, சி.ஜே.ரவி, எம். அந்தோணி, என்.எழில்ராவணன், மலர்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், கே.பி.பி. அறிவழகன், பி.எஸ்.என்.எல். நாகராஜ், எம்.கௌதமன், எம்.உதய பாரி மற்றும் வி.சுரேஷ் காந்தி, இ.எஸ். தமிழ்கொடி, பி.தனசேகரன், எம்.அம்பேத்கர், எம்.சுந்தர மோகன், எம்.பி. முருகேசன், டி.முரளி, எம்.செல்வகுமார், எம்.சி.வேலு, கழக முத்து, ஐ.தமிழ்ச்செல்வம், என்.மதிவேந்தன், ஜே.ராஜேஷ், ஜெபராஜ், கோபால்சாமி, சோமாலிங்கம், சி.பி.ஐ. ஜெகநாதன், ராபர்ட் கென்னடி, டனிகர் என்.செல்வகுமார், ஆலயசாமி, எம்.கே.ரமேஷ், சுரேஷ், கபாலி, எம்.கே. பாலாஜி, நாராயணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தா.இளையஅருணா - சரவெடி சரத்பாலா சிறப்புரை!

# 45-வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனைக் கூட்டம்!

## ஜி.மாரிமுத்து தலைமை! இரா.கருணாநிதி முன்னிலை!

சென்னை, ஜூன் 12 -

பெரம்பூர் தெற்குப் பகுதி 45-வது வட்ட தி.மு.க. சார்பில் தெருமுனைக் கூட்டம் மற்றும் நலத் திட் உதவிகள்வழங்கும் விழா இன்று (12.6.2023) திங்கள் மாலை 6 மணி அளவில் முரசொலி மாரிமுத்து தலைமையில் இரா.கருணாநிதி முன்னிலையில் நடைபெறுகிறது.

மு.ரவி, ஆர்.ராஜேந்திரன், ஆர்.கே.எஸ்.எம்.தம்பையா, எம்.சாந்தி, மு.அன்பழகன், கே.சுரேஷ்குமார், ஏ.மரியராஜமாணிக்கம் , முனியாண்டி, குமார், இளமாறன் ஆகியோர் வரவற்கின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா ஆகியோர் நல உதவிகள் வழங்குகின்றனர்.

தலைமை கழக பேச்சாளர் சரவெடி சரத் பாலா சிறப்புரையாற்றுகிறார்.

இதில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., க.ஜெயராமன்

இரா. நரேந்திரன், சர்பஜெபதாஸ், சர்மிளா காந்தி, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, சி.ஆனந்தி, கமலகண்ணன், வி. தயாளன் , அ.தமிழ்ச்செல்வன், மதிவாணன், டி.கமலக்கண்ணன், க.அமுல் , மு.சாகுல்ஹமீது, எஸ்.சாக்ரடீஸ், வி.வேதா, வி.எஸ்.பிரபு, இரா.ஜோதிமணி, ஏ.ஜியாவுதீன், இரா. லீலாவேலு, ஏ.செந்தூர்பாண்டியன், எம்.லதா, க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், கி.தினகரன், வி.முருகன், இரா.அரிதாஸ், சி.எஸ்.ரவி, என்.கார்த்திபன், செந்தமிழ் அரசு, எம்.உமாபதி, கே.வி.ராஜன்,நா.வீரமுத்து, எஸ்.செபஸ்டின், ச. சச்சிதானந்தம், எம்.மனோகர், நா.திருமலை ,சண்முகம், இரா.முரளிதரன், கு.பரத், எஸ்.கோவர்த்தனன், மாசி. முருகன், எம்.சரவணன்,. சையத் அலிகான், மு.பழனி, எம்.நந்தகோபால், எம். அருண்சக்கரவர்த்தி, டி.சேகர் னிவர்மா மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

முனிஸ்சிவா, ராமச்சந்திரன், சண்முகம், ஆர்.மாரிமுத்து, முரளிகிருஷ்ணன், முரளிதரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை யொட்டி கலைஞரின் புகழ்பாடும் மாபெரும் கவியரங்கம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் பல்லாவரத்தில் நடைபெற்றது. இக்கவியரங்கில் கவிஞர்கள் விவேகா, ஆண்டாள் பிரியதர்சினி, தங்கம் மூர்த்தி, சொற்கோ, இளையகம்பன், மணிமாறன் ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றினார்கள். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு திமுக மாநில மகளிரணி ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி த.காரல்மார்க்ஸ் நடத்திய தஞ்சை மேம்பாலம் அருகில் உள்ள செல்வராஜ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் இரண்டு நாள் நடைபெற்ற மாநில அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் பங்கேற்று கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார். இப்போட்டியில் 24 அணிகள் பங்கேற்றனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திமுக மாநில மகளிரணி ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி.காரல் மார்க்ஸ், தஞ்சை மத்திய மாவட்ட திமுக துணை செயலாளர் கனகவள்ளிபாலாஜி, பொறியாளர் எஸ்.ஜெயபார்வதி, போட்டி ஒருங்கிணைப்பாளர் சிபிநயினார், மருத்துவக் கல்லூரி பகுதி செயலாளர் .சதாசிவம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்..